பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3·50

UTHAYAN

சுடர்: 5 பிரமோதூத ஆண்டு ஐப்பசி மீ 17 உ. சனிக்கிழமை (03 - 11 - 1990) ஹிஜ்ரி 1410 ற. ஆகிர் 14 கதிர்: 241

# மன்னார் நகரத்தில் நேற்றும் தொடர்ந்து உக்கிர சண்டை!

## வான் தாக்குதலும் அகோரம்

யாழ்ப்பாணம், நவ 3

மன்னார் நகரிலும் அதை அண்டிய பகுதிகளிலும் நேற்றும் தொடர்ந்து இரண்டாவது நாளாக உக்கிரமான சண்டை நடைபெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஹெலிக்கொப்டர் மற்றும் விமானங்களிலிருந்து அகோர வான் தாக்குதல்களும் இடம் பெற்றன.

மன்னார் நகரப் பகுதிக்கும் தாராபுரத்திற்கும் இடையில் கடும் சண்டை நேற்றும் இடம் பெற்றதாக விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

பேசாலை, தாழ்வுபாடு எருக்கலம்பிட்டி ஆகிய பகுதிகளில் ஹெலிக்கொப்டர்களில் இருந்து கண்மூடித்தனமான தாக்குதல்கள் இடம்பெற்றன.

தள்ளாடி முகாமிலிருந்து சூழவுள்ள கிராமப்பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

நேற்றும், நேற்று முன்தினமும் மன்னார் பகுதியில் அரச படைகள் கட்டவிழ்த்து விட்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## கரம்பனில் ஷெல் தாக்குதல்

யாழ்ப்பாணம், நவ. 3

ஊர்காவற்றுறை முகாமில் இருந்து நாரந்தனை, கரம்பன் பகுதிகளை நோக்கி நேற்று முன்தினம் இரவு ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

இதே சமயம் —

ஊர்காவற்றுறைப் பகுதியில் பகல் நேரத்தில் வீடுகள் தகர்க்கும் குண்டுச் சத்தங்களும் கேட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. [உ-3]

## காவல்அரண்மீது புலிகள் தாக்கு

யாழ்ப்பாணம், நவ 3

கடந்த புதனன்று இரவு 8 மணியளவில் மட்டக்களப்பு மாவட்டத்தில் சின்னவத்தை இராணுவ முகாம் காவல் அரண் மீது விடுதலைப் புலிகள் ''அருள் 89'' ஷெல் தாக்குதல் நடத்தியதாகவும், துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஏற்பட்ட சேத விவரங்கள் குறித்து விரிவான தகவல் ஏதும் கிடைக்கவில்லை. [உ]

## மன்னார் பகுதி மக்கள் பொது இடங்களில் தஞ்சம்

### ஆஸ்பத்திரியும் அகதி முகாம்

மன்னாரில் இடம்பெற்று வரும் இராணுவ நடவடிக்கையை அடுத்து பல ஆயிரக்கணக்கான மக்கள் பொது இடங்களில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

மன்னார் ஆஸ்பத்திரியும் அகதி முகாமாக மாறி உள்ளது. அங்கு பெரும் எண்ணிக்கையானோர் அகதிகளாகத் தஞ்சம் புகுந்துள்ளனர். இதனால் வைத்திய சேவையும் ஸ்தம்பிதமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சென். சேவியர் கல்லூரி, சென். சேவியர் கன்னியாஸ்திரியர் மடம், சென். செபஸ்தியர் தேவாலயம், பள்ளிமுனை தேவாலயம், பெந்தேகோஸ்தே மிஷன் தேவாலயம் ஆகியவற்றிலும் அகதிகள் தங்கியுள்ளனர். [ஒ 3]

## ஷெல் தாக்குதல்

யாழ்ப்பாணம், நவ. 3

காங்கேசன்துறை, மாவிட்டபுரம், கட்டுவன் பகுதிகளில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் நேற்று அடிக்கடி ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டனர். (ஒ-5)

## ஊர்காவற்றுறை முகாம் சிப்பாய்கள் இருவர் பலி

யாழ்ப்பாணம், நவ 3

நேற்று முன்தினம் (வியாழன்) பிற்பகல் 2.30 மணியளவில் ஊர்காவற்றுறையில் இருந்து பாலக்காட்டுச் சந்திக்கு வந்த இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர்.

இந்தத் தாக்குதலின் போது இராணுவச் சிப்பாய்கள் இருவர் கொல்லப்பட்டனர்.

விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் இத்தகவலைத் தெரிவித்தன. (ஒ)

## கப்பலில் வந்த தபால்கள் இன்று முதல் விநியோகம்

யாழ்ப்பாணம், நவ, 3

கப்பலில் வந்த தபால்கள் இன்று யாழ் நகரப் பகுதியில் விநியோகிக்கப்பட இருக்கின்றன.

குடாநாட்டில் உள்ள தபாலகங்களுக்கான தபால்பொதிகள் அந்தந்தத் தபால் அதிபர்களிடம் நேற்று ஒப்படைக்கப்பட்டன.

யாழ் நகரத்துக்கான தபால்கள் நேற்று தரம்பிரிக்கப்பட்டன. அவை இன்று தொடக்கம் விநியோகிக்கப்படும்.

கப்பலில் வந்த தபால் பொதிகளில் பதிவுத் தபால்கள் இடம்பெறவில்லை என்றும் தெரியவந்தது. (ஒ-3)

## காசோலைகள் டிராப்டுகள் வந்தன

யாழ்ப்பாணம், நவ 3

கடந்த ஜூன் மாதம் முதல் கொழும்பில் தேங்கிக் கிடந்த இலங்கை வங்கிக்குரிய காசோலைகள், டிராப்டுகள் மற்றும் ஆவணங்கள் கப்பல் மூலம் யாழ்ப்பாணம் கொண்டு வரப்பட்டுள்ளன.

கப்பல் மூலம் கொண்டு வரப்பட்ட காசோலைகள், டிராப்டுகள் தரம்பிரிக்கப்பட்டு அந்த அந்த கணக்குகளில் வைப்பிலிடப்படும் வேலைகள் தற்பொழுது நடைபெற்று வருவதாக அதிகாரிகள் தெரிவித்தனர். (ஒ-3)

## தமிழருக்கு விசா வழங்க இந்தியதூதரகம்பின்னடிப்பு

கொழும்பு, நவ. 3

தமிழர்களுக்கு விசா வழங்குவதில் கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகம் பாரபட்சம் காட்டுவதாகச் சொல்லப்படுகிறது. சிங்களவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் விசா வழங்குவதில் தாராளம் சாட்டும் இந்தியத் தூதரகம் தமிழர்களுக்கு மட்டும் இழுத்தடிக்கிறது; நிராகரிக்கிறது என்று புகார் சொல்லப்படுகிறது.

இது குறித்து ''இந்து'' பத்திரிகையில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

இந்துவின் கொழும்புச் செய்தியாளரால் எழுதப்பட்ட அதில் தங்களுக்கு விசா வழங்காமல் தூதரகம் தாமதம் செய்வது குறித்து பல தமிழர்கள் அதிருப்தி தெரிவித்ததாக எடுத்துக்கூறப்பட்டுள்ளது.

விசா எடுத்துச் செல்வதை விட, படகு மூலம் சட்ட விரோதமாகச் செல்வது இலகு என்று தமிழர்கள் கருத்துத் தெரிவித்ததாகவும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இலங்கையிலிருந்து தங்கம் மற்றும் போதைப்பொருள் கடத்தல் நடப்பதால் தாம் மிக அவதானமாகப் பரிசீலனை செய்தே விசா வழங்குவதாக தூதரக அதிகாரிகள் கூறியதாகவும் அந்தச் செய்தி

[4 ஆம் பக்கம் பார்க்க]

## வெள்ளம்

கொழும்பு. நவ. 3

தென்னிலங்கையின் பல பகுதிகளிலும் கடந்த இரண்டு மூன்று நாட்களாகப் பலத்த மழை பெய்து வருகிறது.

பல இடங்களில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது. வெள்ளம் காரணமாக பல நெடுஞ் சாலைகளில் போக்குவரத்துத் தடைப்பட்டுள்ளது. [அ]

## 4ஆம் கட்ட நிவாரணத்துக்கு போதியபொருள்கள் இல்லை

யாழ்ப்பாணம், நவ. 3

நான்காம் கட்ட உலர் உணவு நிவாரணம் வழங்குவதற்குப் போதிய உணவுப் பொருள்கள் இல்லை. அதனால் அவரவருக்குரிய அளவு உணவுப் பொருள்களை வழங்க முடியாது.

அரிசி, மா ஆகியவற்றின் எடை குறையலாம். அவ்வாறு குறையும் எடைக்குச் சமமான பணத்துக்கு மண் எண்ணெய் வழங்கப்படும்.

இத்தகவலை யாழ். மேலதிக அரச அதிபர் திரு. கே. சண்முகநாதன் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் ஒரு கட்டத்துக்குரிய நிவாரணம் வழங்க 2 ஆயிரம் தொன் அரிசி, 2 ஆயிரம் தொன் மா, 800 தொன் சீனி, 500 தொன் பருப்பு, 50 தொன் லக்ஸ்பிறே தேவை என மதிப்பிடப்பட்டுள்ளது.

தற்சமயம் கப்பலில் வந்த பொருள்கள் இந்த நிவாரணத்தை முழுமையாக வழங்குவதற்கும் போதுமான அளவு இல்லாத காரணத்தால், மாற்று ஏற்பாடு செய்ய வேண்டியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். [ஒ-3]

## பீப்பாய்க் குண்டு மருந்தில் 'வாணம்' விட்ட சிறுவன்!

### எரிகாயங்களுடன் ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், நவ. 3

வெடிக்காத பீப்பாய்க் குண்டுகளில் இருந்த வெடிமருந்துகளை எடுத்து நெருப்பில் போட்டு ''பூவாணம்'' கொளுத்தி விளையாடிய சிறுவன் ஒருவன் அந்த வெடிமருந்து சீறி எரிந்ததில் முகம் முழுவதும் எரிகாயங்களுக்கு இலக்கானான்.

கடந்த வாரம் யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற இந்தச் சம்பவத்தில் காயமுற்ற வின்சன்ட் அனஸ்ரின் (வயது 7) என்ற இச்சிறுவன் படுகாயமுற்ற நிலையில் மானிப்பாய் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளான். (உ-15)

## ஆரையம்பதியில் 30 தமிழர் கொலை

யாழ்ப்பாணம், நவ. 3

மட்டக்களப்பு மாவட்டம், ஆரையம்பதி இராணுவ முகாமில் வைத்து நேற்று முன்தினம் (வியாழன்) முப்பது தமிழர்கள் சுட்டுக் கொல்லப்பட்டு டயர் போட்டு எரிக்கப்பட்டார்கள்.

விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் இத்தகவலைத் தெரிவித்தன.

கடந்த புதனன்று ஆரையம்பதி, கல்லடி, தாழங்குடா, புதுக்குடியிருப்பு, கிரான்குளம் ஆகிய பகுதிகளைச் சுற்றி வளைத்த இராணுவத்தினரும் முஸ்லிம் ஊர்காவலரும் 30 பொதுமக்களைக் கைது செய்து கொண்டு சென்றதாகவும்—

அவர்களே சுட்டுக் கொலை செய்யப்பட்டு டயர் போட்டு எரிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. [உ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### பால் விற்பனை

யாழ் பெருமாள் கோவிலடியிலுள்ள எமது பால் விற்பனைச் சாலை தினமும் காலை 6. 30 மணி முதல் மாலை 6. 00 மணி வரை திறந்திருக்கும். யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், திருநெல்வேலி கிழக்கு. (சி/5361)

### பூஜைக்காக வாழும் பூவை

மீரா வெளியீடு கே. எஸ். ஆனந்தன் எழுதியது குடும்பத்தில் தோன்றும் அனைத்துப் புயலுக்கும் அசையாது நிற்கும் பெண்ணொருத்தியின் புனிதமான வாழ்வைச் சித்தரிக்கும் கதை 40/ ரூபா. துர்க்கா ஸ்ரேசனேர்ஸ். சுன்னாகம் பிக்பென்ஸ் (B) கிளிநொச்சி, திருக்கணிதம் சாவகச்சேரி, ஸ்ரீகாந் புத்தகசாலை, நல்லூர். (14557)

### தவறிவிட்டது

பன்னாலையைச் சேர்ந்த ஆறுமுகப்பிள்ளை என்பவருடைய 342240011 V இலக்க அடையாள அட்டை, இலங்கை வங்கி சேமிப்பு புத்தகம் இல10988 மூக்கு கண்ணாடி ஆகியன சுன்னாக சந்தையில் தவறிவிட்டது. கண்டு எடுப்பவர்கள் தயவு செய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (14617)

### போட்டோஸ்ரற் (ஸ்கைலைன்ஸ்)

தரமான போட்டோஸ்ரற் றோனியோ வேலைகளுக்கு தொடர்பு கொள்ளுங்கள் "ஸ்கைலைன்ஸ்" 281 B, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் "Skylines" 281 B Clock Tower Road. Jaffna. (ஏஜென்சி தபால் சந்தோர் அருகாமை). [சி/5362]

### கிளீன் கட் போட்டோஸ்ரற்

தெளிவான போட்டோஸ்ரற் பிரதிகளை உடனடியாகப் பெற்றுக் கொள்ளவும் அடையாள அட்டைகளுக்கு லாமினேட் செய்துகொள்ளவும் கிளீன் கட் 37, சிவகுருநாதர் வீதி, பிறவுண் வீதி. யாழ்ப்பாணம் யாழ் இந்து மகளிர் சந்திக்கு அண்மையில். (சி-5355)

### விற்பனைக்கு

நத்தார், புதுவருட வாழ்த்துக்களை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். (வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு) "பண்டேலா ரேடர்ஸ்" இல 256A, பருத்தித்துறை வீதி, நல்லூர் யாழ்ப்பாணம். [14550]

அல்சேசன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு பூச்சி நீக்கியது தொடர்பு பொ. இல்லைராசா 3ம் கட்டை பருத்தித்துறைவீதி, கல்வியங்காடு. (Organ Classes) எதிர் வீடு. [14622]

### மணமகள் தேவை

அவுஸ்திரேலியாவில்பொறியியலாளராகப்பணி புரியும் 28 வயது நிரம்பிய செவ்வாய்க் குற்றமற்ற இந்து வேளாள மணமகனிற்கு அதேகுலத்தில் 25 வயதிற்கு உட்பட்ட இலங்கை அல்லது இந்திய விஞ்ஞானப் பட்டதாரி மணமகள் தேவை. தொடர்பு 152 C/o உதயன் யாழ்ப்பாணம். [14620]

### கல்வி

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் சகல தரப்பினருக்கும் தனிப்பட்ட முறையில் உங்கள் வீடுகளுக்கு வந்து ஆரம்ப அறிவிலிருந்து ஆங்கிலம் கற்பிக்கப்படும். நேரில் அல்லது கடிதமூலம் தொடர்பு கொள்ளவும் ஜெயராஜா, 204, மானிப்பாய் வீதி, ஒட்டுமடம், யாழ்ப்பாணம். (14551)

### அல்டி (ALDI)

பழைய இடத்திலேயே இயங்க உள்ளது. எம்மிடம் மணிக்கூடு திருத்த தந்தவர்கள் 10ஆம் திகதிக்கு முன்பாக ரசீதைக் காட்டிப் பெற்றுக் கொள்ளவும். அல்டி 269/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். கைக்கடிகாரங்கள், சுவர் மணிக்கூடுகள், மணிக்கூடு பற்றறிகள் முதலிய எம்மிடம் நியாய விலையில் பெற்றுக் கொள்ளலாம். (சி/5364)

# 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னையின் மடியில்:
19 06 - 1964

அழிப்பு:
03 - 11 - 1987

## கி. கெனிஸ்ரஸ் கொலின்

"சீவியத்தில் நேசித்தவர்களே மரணத்திலும் மறவாதீர்கள்"

ஆண்டவன் பாதம் சென்று ஆண்டு மூன்று மறைந்தாலும்
எம் அகங்களில் இருந்து உம் நினைவுகளோ அகலாது

இம் மண்ணில் கொடையில் சிகரமென தன்னை உருக்கி ஒளி கொடுக்கும் மெழுகு வர்த்தியென பாசக் கொழுந்தாய், இல்லத்தில் ஒளி விளக்காய் அனைவருக்கும் இனியவனாய் வாழ்ந்து மடிந்தாயே இறைவா! நீ தந்தாய், நீ எடுத்தாய் உன் நாமம் என்றும் போற்றும் வரத்தை எம் அருமைச் செல்வத்திற்கு அளித்திட உன்பாதம் சரணடைகின்றோம்.

அவரின் நினைவாக அச்சுவேலி புனித சூசையப்பர் ஆலயத்தில் 03 - 11 - 1990 சனிக்கிழமை காலை 5-45 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். இத் திருப்பலியில் அனைவரையும் பங்கு எடுக்குமாறு தாழ்மையுடன் வேண்டுகிறோம்.

இவரின் பிரிவால் துயருறும்,
**பெற்றார், சகோதரர்கள், உறவினர்கள், நண்பர்கள்.**

(14585)

## கல்விசார்ந்த பதவிகளுக்கான நேர்முகப் பரீட்சைகள் - யாழ். பல்கலைக்கழகம்

கீழ்க்கண்ட பதவிகளுக்கான நேர்முகப்பரீட்சைகள், அவைகளுக்கு எதிராக தரப்பட்டுள்ள திகதிகளில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகசபை அறையில் நடைபெறும் என்பதை அறியத் தருகின்றேன்.

1. மருத்தியல்/ உடலமைப்பியல்/ உடற்றொழியியல் சமூகமருத்துவத்தில் சிரேஷ்ட விரிவுரையாளர், நோயியல்/ சமூகமருத்துவத்தில் விரிவுரையாளர், உடலமைப்பியல்/ சட்டமருத்துவத்தில் உதவி விரிவுரையாளர் அறுவை மருத்துவ மகப்பேற்றியலும் மாதர்நோயியலும்/ மனநோயியலில் செய்முறைக் காட்டுனர் 1990 - 11 - 05 திங்கட்கிழமை காலை 11 00 மணிக்கு நடைபெறும்.
2. கல்வியியல் சிரேஷ்ட விரிவுரையாளர் தரம்I/ சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II/ உதவி விரிவுரையாளர் 1990-11-06 (செவ்வாய்க்கிழமை) காலை 9 00 மணிக்கு நடைபெறும்.
3. வணிகம்/ வியாபார நிருவாகத்தில் உதவி விரிவுரையாளர், கிறிஸ்தவ நாகரீகத்தில் சிரேஷ்ட விரிவுரையாளர் தரம்II/ உதவி விரிவுரையாளர், அரபு மொழி இஸ்லாமிய நாகரீகத்தில் உதவி விரிவுரையாளர், சமஸ்கிருதத்தில் உதவி விரிவுரையாளர், ஆங்கிலத்தில் போதானாசிரியர்- 1990 - 11 - 15 (வியாழக்கிழமை) காலை 9.00 மணிக்கு நடைபெறும்

பதிவாளர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1990-11-01

[சி-5371]

## தற்காலிக செய்முறைக் காட்டுனர் - மருத்துவபீடம்

மருத்துவ பீடத்திலுள்ள Pre and Para Clinical துறைகளில் செய்முறைக்காட்டுனராக கடமையாற்றுவதற்கு பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் 1990 - 11 - 07 ஆம் திகதி காலை 10.00 மணி வரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

மேலும் விண்ணப்பதாரிகளை அன்று 1990-11-07 புதன்கிழமை காலை 11 30 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சபை அறையில் நேர்முகப் பரீட்சைக்காக சமூகமளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பதிவாளர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
திருநெல்வேலி.
யாழ்ப்பாணம்.
1990 - 11 - 01

(சி/5372)

# விக்னா டியூசன் சென்ரர்

52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## கலந்துரையாடல்

O/L DAY CLASS
[05 - 11 - 90 திங்கள் காலை 9 மணி]

O/L Sat, Sun
[10 - 11 - 90 சனிக்கிழமை காலை 9 மணி]

O/L EVENING CLASS
ஆண்டு 6, 7, 8, 9 } 5 - 11 - 90 திங்கள் பி.ப3மணி.

**A/L கலை வர்த்தக வகுப்புக்கள்**

A/L SAT, SUN
(90, 91, 92 ஆண்டு) 10-11-90 காலை 9மணி.

A/L DAY CLASS
(90 ஆம் ஆண்டு) 12-11-90 காலை 9மணி.

மீண்டும் வகுப்புக்கள் ஆரம்பிப்பதற்கான நேர அட்டவணை சம்பந்தமாகவும் மேலும் விபரங்கள் பற்றிய கலந்துரையாடலில் சகல மாணவர்களையும், ஆசிரியர்களையும் சமுகமளிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

குறிப்பு: வெளிமாவட்டத்திலிருந்து இடம்பெயர்ந்த சகல மாணவர்களையும் மேற்படி கலந்துரையாடலில் கலந்துகொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

– அதிபர். [சி-5367]

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பின்வரும் பதவிகளுக்கு பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் என்னால் பெற்றுக் கொள்ளப்படும்.

1. மருத்துவப் பேராசிரியர்
2. உடலமைப்பியல்- பேராசிரியர்
3. மன நோயியல்- பேராசிரியர்
4. நோயியல்- பேராசிரியர்
5. அங்கக் கோணல் அறுவை மருத்துவ அறக் கொடைத்தவிசு
6. சுழலையியலில் அறக் கொடைத் தவிசு
7. ஒட்டுண்ணியியல்/ நுண்ணுயிரியல் / மகப்பேற்றியலும் மாதர் நோயியலும்/குழந்தை மருத்துவம் / அறுவை மருத்துவம்/சமூகமருத்துவம் / மருந்தியல்/ மருத்துவம் – விரிவுரையாளர்/சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II
8. உடற்றொழிலியல் உதவி விரிவுரையாளர்/ தற்காலிக உதவி விரிவுரையாளர்
9. அறுவை மருத்துவத்தில் தற்காலிக விரிவுரையாளர்

**சம்பள அளவுத்திட்டம்:**

1. பேராசிரியர் தரம் II: ரூபா 12, 200 - 6x300- 14,000/- மாதமொன்றுக்கு
2. சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II: ரூபா 8,000 – 5x250 – 9,250/– மாதமொன்றுக்கு
3. விரிவுரையாளர் (மருத்துவம்): ரூபா 4,500- 10x200 – 6 500/- மாதமொன்றுக்கு (மருத்துவ பீடத்தின் விரிவுரையாளர் ஒருவர் முதல் நியமனத்தின் போது மேற்குறித்த சம்பள அளவு திட்டத்தில் 4,500/-ரூபாவுக்கு மேலதிகமாக இரண்டு படியில் அதாவது ரூபா 4,900/- இல் வைக்கப் படுதல் வேண்டும்)
4. உதவி விரிவுரையாளர்: ரூபா 3,000/- மாதமொன்றுக்கு (நிலையானது) ஓராண்டு காலத்திற்கு

பேராசிரியர்களுக்கும் அறக் கொடைத்தவிசுகளுக்கும் விண்ணப்ப முடிவுத்தேதி 1990 - 12 - 26 ஆகும் ஏனைய பதவிகளுக்கு 1990-11-30 ஆகும். விண்ணப்பங்கள் இப் பல்கலைக்கழகத்தின் தாபனக் கிளையின் சிரேஷ்ட உதவிப் பதிவாளரிடமிருந்து பெறக் கூடிய படிவங்களில் செய்யப்படுதல் வேண்டும். பேராசிரியர், அறக் கொடைத் தவிசுப் பதவிகளுக்கு விண்ணப்பப்படிவங்களுக்கான வேண்டுகோளுடன் சுய முகவரியிட்டு ரூபா 2/-முத்திரை ஒட்டப்பட்ட 23x10 சதம மீற்றர் அளவுடைய கடித உறையும் ஏனைய பதவிகளுக்கு சுய முகவரியிட்டு முத்திரை ஒட்டப்பட்ட 23x10 சதம மீற்றர் அளவுடைய கடித உறையும் இணைத்து அனுப்பப்பட வேண்டும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத் தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள் ஆகியவற்றின் விண்ணப்பதாரிகள் அந் நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் தனித்தனி விண்ணப்பங்கள் அனுப்புதல் வேண்டும்.

தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர்களின் சிறப்புத் தகைமைகளையும்/ அல்லது அனுபவத்தையும் கவனத்திற் கொண்டு சம்பள அளவுத்திட்டத்தின் பொருத்தமான படியில் வைக்கப்படுவர்.

குறிப்பு; அறக்கொடைத் தவிசு பதவிகளுக்கும் பேராசிரியர் பதவிக்கும் ஒப்பந்த அடிப்படையிலான நியமனமும் கவனிக்கப்படும்.

பதிவாளர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்;
1990 10-30

(சி-5370)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## நிவாரணத்தில் பெரும் சதி!

யாழ்ப்பாண மாவட்டத்தில் அவசர நிவாரணத் திட்டங்களை நடைமுறைப் படுத்த அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது: ஆனால் அதற்குரிய பணம் ஒதுக்கப் படவில்லை அது விடயத்தில் அரசாங்க அதிகாரிகள் அசிரத்தையாக உள்ளார்கள்— இவ்வாறு உள்ளூர் அதிகாரிகள் கவலை தெரிவித்திருக்கிறார்கள், அதாவது தமிழ்ப் பகுதி மக்கள் புறக்கணிக்கப்படும் வழமையான ஓரவஞ்சகம், நிவாரணத்திலும் மேலோங்கி நிற்கிறது என்பதே சுருக்கம்

போரினால் பாதிக்கப்பட்டு இடம் பெயர்வோர் அங்கவீனராவோர். இறந்தோரின் குடும்ப அங்கத்தினர் ஆகிய முத்தரப்பாருக்கும் உதவுவதற்கென்று ஆறம்ச நிவாரணத்திட்டம் அமுல் செய்யப்படுவதாக அரசு பெரிதாக விளம்பரப்படுத்தி வருகிறது.

இந்த ஆறம்சத் திட்டத்தில் குறிப்பிடத்தக்க பணத் தொகை வழங்கப்படும் ஆறாவது அம்சம் தமிழர்களுக்கு பொருந்தாமல் இருக்கக்கூடியதாகச் சதி செய்யப்பட்டுள்ளது. இறந்தவர்களின் குடும்ப அங்கத்தவர்கள், காயமுற்று அங்கவீனமுற்றோர் ஆகிய இருசாராருக்கும் 15 ஆயிரம் ரூபா முதல் 50 ஆயிரம் ரூபா வரையான நிவாரணம் வழங்க ஆறாவது அம்சம் வகை செய்கிறது. ஆனால் "பயங்கரவாத வன்செயலால்" பாதிக்கப் பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கப்படும் என்ற அடைமொழி பாதிக்கப்பட்ட தமிழ்ப்பொதுமக்களுக்கு குறிப்பிட்ட நிவாரணத்திலிருந்து கதவடைப்புச் செய்திருக்கிறது.

வடக்கு-கிழக்கில் நடக்கும் யுத்தத்தால் பெரும் எண்ணிக்கையில் பாதிக்கப்பட்டவர்கள் தமிழர்களே அதில் யாருக்கும் எவ்வித சந்தேகமும் இருக்கமுடியாது. அவ்வாறு பாதிக்கப்பட்ட தமிழர்கள் அனைவரும் இராணுவத்தினரின் நடவடிக்கையால் நிர்க்கதியானவர்களே: ஆனால் "பயங்கரவாத வன்செயல்" என்ற அடைமொழி இராணுவத்தினரால் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு நிவாரணம் கிடைக்காமற் செய்துவிட்டது. அதனை "இராணுவ நடவடிக்கையால்" அல்லது "சிவில் கலவரங்களால்" என்று வரையறுத்திருந்தால் தமிழர்களும் அந்த நிவாரணத்தைப் பெறத் தகுதி பெற்றிருப்பர், இதனையே நாம் மேலே சதி என்று குறிப்பிட்டோம்

அகதிகளாக இடம்பெயர்ந்தோருக்குச் சமைத்த உணவு அல்லது உலர் உணவு வழங்குதல் என்ற உதவி மட்டுமே பெரும் சிரமத்தின் மத்தியிலும், இழுபறிபட்டும் தமிழர்களுக்கு வழங்கப்படுகிறது.

ஆனால் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் பாதிக்கப் பட்ட குறைந்த எண்ணிக்கையான சிங்கள மக்களுக்கும், "அயல் மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட" பெரும் எண்ணிக்கையான சிங்களவர்களுக்கும் திட்டத்தின் ஆறு அம்ச உதவிகளும் எவ்வித தங்குதடையும், சிரமமும் இல்லாமல் தாராளமாக முழுமையாக வழங்கப்படுகின்றன!

# சீ-நோர் தொழிற்சாலைகளை மூட முயற்சியா?

## தலைமையக நடவடிக்கையால் ஊழியர்கள் மத்தியில் அச்சம்

யாழ்ப்பாணம், நவ. 3

யாழ் மாவட்டத்தில் இயங்கும் சீ-நோர் தொழிற்சாலைகளை மூடுவதற்கு ஸ்ரீ லங்கா அரசாங்கம் திட்டமிட்டுவருகிறதா?

இப்படிச் சந்தேகம் தெரிவிக்கப்படுகிறது:

தொழிற்சாலைகளை மூடக்கூடிய வகையில் மறைமுகமான நடவடிக்கைகள் சில எடுக்கப்பட்டு வருகின்றன என்று ஊழியர்கள் மத்தியில் அச்சம் தெரிவிக்கப்பட்டு வருகிறது.

காரைநகர், குருநகர் சீ நோர் தொழிற்சாலைகளில் கடமையாற்றிவந்த சமயாசமய ஊழியர்களை வேலையிலிருந்து உடனடியாக இடை நிறுத்தி வைக்கும்படி உத்தரவிடப்பட்டிருப்பதே இந்த அச்சத்துக்குக் காரணம் ஆகும்.

இந்த உத்தரவால் குருநகரில் கடமையாற்றிய 166 ஊழியர்களும், காரைநகரில் கடமையாற்றிய 57 ஊழியர்களுமாக 223 பேர் வேலையை இழந்துள்ளனர்.

அதேசமயம் இந்த சமயாசமய ஊழியர்களுக்கு ஜூன் மாதம் முதலாம் திகதியில் இருந்து கொடுப்பனவுகளை நிறுத்தி வைக்கும்படியும் கொழும்பில் உள்ள தலைமைச் செயலகம் அறிவித்திருந்தது.

எனினும் இந்த உத்தரவு கிடைக்குமுன்பே இங்குள்ள பிரதிப்பொது முகாமையாளர் எடுத்த நடவடிக்கை காரணமாக பெரும்பாலான ஊழியர்களுக்கு ஜூன். ஜூலை மாதக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த மூன்று மாத காலமாக ஊழியர்கள் அனைவரும் சம்பளம் இல்லாத நிலையில் கடமைக்கு வந்துசெல்கின்றனர்

இங்கு கடமையாற்றும் ஊழியர்களில் 60 சதவீதத்துக்கு மேற்பட்டவர்கள் கடந்தகால இராணுவ நடவடிக்கைகளால் குருநகர், ஊர்காவற்றுறை, காரைநகர்ப் பகுதிகளில் உள்ள தமது வீடு வாசல்களையும் இழந்துள்ளனர்.

இலங்கையிலேயே சீ-நோர் தொழிற்சாலைகள் முதன் முதல வட பகுதியிலேயே ஆரம்பிக்கப்பட்டன. தலைமை அலுவலகமும் இங்கேயே இருந்து வந்தது.

பின்னர் தலைமை அலுவலகம் 1979 ஆம் ஆண்டளவில் கொழும்புக்கு மாற்றப்பட்டது.

கொழும்பு மேல் இடத்தின் தற்போதைய நடவடிக்கைகள் வட பகுதியில் உள்ள சீ-நோர் தொழிற்சாலைகளின் எதிர்காலத்தை கேள்விக்குரியதாக்கி உள்ளன. (இ - 6)

# தமிழீழ மாவீரர் நாள் கலந்துரையாடல் இன்று முதல்

யாழ்ப்பாணம், நவ 3

தமிழீழ மாவீரர் நாள் தொடர்பான திணைக்கள ரீதியான கலந்துரையாடல்கள் இன்று 3 ஆம் திகதி முதல் 10 ஆம் திகதி வரை நடைபெறஉள்ளன.

உதவி அரசாங்க அதிபர்கள், கிராம சேவையாளர்கள், தபால். உப தபால் அலுவலகப் பொறுப்பாளர்கள். உள்ளூராட்சித் திணைக்கள அதிகாரிகள், காணிப் பதிவாளர் திணைக்கள அதிகாரிகள், மின்சாரசபை அதிகாரி, கமத்தொழில் திணைக்கள அதிகாரி. கால்நடை வைத்திய நிலைய அதிகாரி, கடற்றொழில் கூட்டுத் தாபன அதிகாரி ஆகியோர் இதற்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

வடமராட்சிப் பகுதிக்கான கலந்துரையாடல் இன்று 3 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 3 00 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மண்டபத்திலும்—

தென்மராட்சிப் பகுதிக்கான கலந்துரையாடல் 5 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 3.00 மணிக்கு சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி மண்டபத்திலும்—

வலிகாமம் பகுதிக்கான கலந்துரையாடல் 7ஆம் திகதி புதன் கிழமை மாலை 3 00 மணிக்கு இராமநாதன் கல்லூரி மண்டபத்திலும்—

தீவுப் பகுதிக்கான கலந்துரையாடல் 9 ஆம் திகதி வெள்ளிக் கிழமை காலை 10 00 மணிக்கு வேலணை மகாவித்தியாலயத்திலும்—

காரைநகர் பகுதிக்கான கலந்துரையாடல் 10 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10,00 மணிக்கு யாழ்டன் கல்லூரி மண்டபத்திலும் நடைபெறும். (இ)

## இன்று முதல் விரிவுரைகள்

யாழ்ப்பாணம், நவ. 3

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தின் யாழ் பிராந்திய நிலையத்தில் இன்று சனிக்கிழமை காலை முதல் மீண்டும் விரிவுரைகள் ஆரம்பமாகவுள்ளன. உயர் தொழில் ஆங்கிலம், சட்டமாணி, சிறு கைத்தொழில் முகாமைத்துவம் ஆகிய கற்கைநெறிகளுக்கான விரிவுரைகளே இன்று ஆரம்பிக்சப்படவுள்ளன. (இ)

## வட இலங்கை சங்கீத சபை பரீட்சை முடிவு

யாழ்ப்பாணம், நவ. 3

வட இலங்கை சங்கீதசபையின் 1990 ஆம் ஆண்டுப் பரீட்சை முடிவுகள் வெளியாகியுள்ளன.

பரதநாட்டியம் தரம் 5 தரம் 6 ஆகியவற்றின் முடிவுகள் தவிர்ந்த மற்றைய பரீட்சைகளின் முடிவுகளை கல்வி அலுவலகத்தில் எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்பாக பெறுமாறு கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் அறிவித்துள்ளார். (இ - 3)

# மாவை கந்தசுவாமி கோயில்: பாதுகாக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ. 3

மாவிட்டபுரம் கந்தசுவாமி தேவஸ்தானம் ஸ்ரீ லங்கா படையினரால் கைப்பற்றப் பட்டுள்ளது. அந்த தேவஸ்தானத்தில் இலட்சக்கணக்கான ரூபா பெறுமதியான பொருள்கள் உள்ளன. அவற்றைப் பாதுகாக்க பாதுகாப்பு அமைச்சுமூலம் உத்தரவாதம் வழங்கவேண்டும்.

மேற்கண்ட அவசர கோரிக்கை ஒன்றை மாவை கந்தன் ஆதீனகர்த்தா மஹாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள் இந்து கலாசார துணை அமைச்சர் திரு. பி. பி. தேவராஜிடம் விடுத்துள்ளார்.

கடந்த 20 ஆம் திகதி ஸ்ரீலங்கா இராணுவம் அந்தப் பகுதியை கைப்பற்றியதைத்தொடர்ந்து ஆலயத்தில் பூஜைகள் நடைபெறுவதில்லை என்றும் அத்துடன் தாம் அங்கு போகமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்றும் அக்கோரிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (இ-3)

# ஜனாதிபதி மீது நம்பிக்கை வைத்துபேச்சுக்குவரட்டுமாம்

கொழும்பு, நவ. 3

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் ஜனாதிபதி மேல் நம்பிக்கை வைத்துப் பேச்சுவார்த்தைக்கு முன்வர வேண்டும்.

பசறையில் நடந்த ஐ. தே. க. பொதுக்கூட்டத்தில், இ. தொ. கா. பொதுச்செயலாளரும்; கைத்தொழில் துணை அமைச்சருமான திரு. எம். எஸ்; செல்லச்சாமி மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்தார்.

பலகோடிக் கணக்கான ரூபாக்களை யுத்தத்துக்காக இன்று செலவிட்டுக் கொண்டிருக்கிறோம்.

ஒரு புறம் யுத்தத்துக்கும், மறுபுறம் அபிவிருத்தி ... இரு பாரிய திட்டங்களுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது.

வடக்கு - கிழக்கில் 12 லட்சம்மக்கள் அகதிகளாக இருக்கின்றனர். ஆயிரக்கணக்கான உயிர்கள் அழிந்து கொண்டிருக்கின்றன. அப்பிரதேசம் சுடுகாடாக காட்சி அளிக்கிறது.

நாட்டின் பொருளாதாரம் மிகவும் பின்னடைந்துள்ளது. வாழ்க்கைச் செலவு மிகப் பயங்கர வேகத்தில உயர்ந்து கொண்டிருக்கிறது; இப்படி அவர் கூறினார்.

கூட்டத்தில் ஜனாதிபதி ஆர். பிரேமதாசா, பிரதமர் டி. பி. விஜேதுங்கா மற்றும் அமைச்சர்கள் பலரும் கலந்து கொண்டனர். (இ - 6)

# ஆங்கில ஆசிரியர்களுக்கு திங்கள் முதல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், நவ 3

யாழ் மாவட்டத்தில் ஆண்டு 7 தொடக்கம் 11வரை கற்பிக்கும் ஆங்கில ஆசிரியர்களுக்கான கருத்தரங்குகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

யாழ். கல்வித் திணைக்கள ஆங்கிலக் கல்வி அதிகாரி திரு. ரி. தியாகராஜா இதனை அறிவித்துள்ளார்.

இந்தக் கருத்தரங்குகள் பின்வரும் ஒழுங்கில் கோட்டக் கல்வி ரீதியாக காலை 9 00 மணிக்கு நடைபெறும்.

யாழ் கோட்டக்கல்வியைச் சேர்ந்த யாழ்ப்பாணம், நல்லூர் ஆங்கில ஆசிரியருக்கு நவம்பர் 5 ஆம் திகதி யாழ். இந்து மகளிர் கல்லூரியிலும்,

மருதனார்மடம் கோட்டக் கல்வியைச் சேர்ந்த கோப்பாய் ஆங்கில ஆசிரியர்களுக்கு நவம்பர் 6 ஆம் திகதி கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியிலும்—

மானிப்பாய் ஆசிரியருக்கு நவம்பர் 9 ஆம் திகதி இராமநாதன் கல்லூரியிலும்—

சாவகச்சேரி கோட்டக் கல்வி ஆசிரியருக்கு நவம்பர் 12 ஆம் திகதி சாவகச்சேரி மகளிர் மகாவித்தியாலயத்திலும்—

பண்டத்தரிப்பு கோட்டக் கல்வி ஆசிரியர்களுக்கு நவம்பர் 15ஆம் திகதி பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியிலும் நடைபெறும். (இ-6)

## அகண்ட நாம பஜனை

பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா சமித்தியினரால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள அகில உலக அகண்ட நாம பஜனை நாளை ஞாயிற்றுக் கிழமை திருநெல்வேலிதெற்கு சேர்-பொன்- இராமநாதன் வீதியில் அமைந்துள்ள சாயி சேவா மண்டபத்தில் நடைபெறும்.

நிகழ்ச்சிகள் காலை 7. 00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பிற்பகல் 5 15 மணிக்கு மகா மங்கள ஆராத்தியுடன் முடிவடையும். [இ-6]

## மக்கள் வங்கி சாவகச்சேரி கிளை

யாழ்ப்பாணம், நவ. 3

மக்கள் வங்கியின் சாவகச்சேரிக் கிளை தற்பொழுது கண்டிவீதியில் சாவகச்சேரி பழைய பொலீஸ் நிலையத்துக்கு அண்மையில் இயங்குகிறது.

இந்த வங்கியில் பணிபுரியும் சகல ஊழியர்களையும் உடனடியாக கடமைக்கு சமுகமளிக்கும்படி கோரப்பட்டுள்ளது. (இ - 6)

## வேம்படி மகளிர் பாடசாலை

யாழ்ப்பாணம், நவ.3

இதுவரை பாடசாலைக்கு சமுகம் அளிக்காத வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை மாணவிகள் அனைவரையும் எதிர்வரும் 5 ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் சமுகம் அளிக்குமாறு அதிபரால் கோரப்பட்டுள்ளது.

## கூட்டம்

யாழ்ப்பாணம். நவ. 3

வட பிராந்திய மினிபஸ் சங்க பஞ்சாயத்து சபை, மினிபஸ் சங்கத் தலைவர்கள். செயலாளர்கள் ஆகியோருக்கான கூட்டம் ஒன்று நாளை 4 ஆம் திகதி நல்லூர் சாதனா பாடசாலையில் நடைபெறும் என மக்கள் முன்னணியின் போக்குவரத்துப் பகுதி அறிவித்துள்ளது: ( )

✶

யாழ்ப்பாணம், நவ. 3

தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்க ஊழியர்களுக்கான கூட்டம் ஒன்று இன்று சனிக்கிழமை காலை 8. 30 மணிக்கு தெல்லிப்பழை ப. நோ. கூ. ச. தலைமைக் காரியாலயத்தில் நடைபெறும். இந்தக் கூட்டத்தில் மாவீரர் தினம் பற்றி ஆலோசிக்கப்படும்; (இ - 6)

## விவசாய பீட விரிவுரைகள் டிச 3 இல்

யாழ்ப்பாணம், நவ. 3

எதிர்வரும் 5 ஆம் திகதி ஆரம்பமாகவிருந்த கிளிநொச்சி விவசாய பீடமுதலாமாண்டு மாணவருக்கான விரிவுரைகள் டிசம்பர் மாதம் மூன்றாம் திகதி கிளிநொச்சி இரணைமடுச் சந்தியிலுள்ள சேவைக்காலப்பயிற்சி நிலையத்தில் ஆரம்பமாக உள்ளன

யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா இதனை அறிவித்துள்ளார். (இ-6)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நிரந்தர நிவாரண பெர்மிட்; துரிதமாக வழங்க முடிவு

யாழ்ப்பணம் நவ. 3
யாழ். மாவட்ட மக்களுக்கு வழங்கப்பட்டு வரும் நிவாரணம் மற்றும் பங்கீட்டுப் பொருள்கள் விநியோகம் ஆகியவற்றுக்குரிய நிரந்தர 'பெர்மிட்'டுக்களைத் துரிதமாக வழங்கவேண்டும் என்று முடிவாகியுள்ளது.

நேற்று செயலகத்தில் மேலதிக அரச அதிபர் திரு. கே. சண்முகநாதன் தலைமையில் உதவி அரச அதிபர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

எதிர்வரும் ஆறாம் திகதி முதல் 4 ஆம் கட்ட நிவாரண விநியோகம் ஆரம்பிக்கப்பட இருப்பதால் அதற்கு முன்னர் பெர்மி டுக்களை வழங்கி முடிக்குமாறு உதவி அரச அதிபர்கள் பணிக்கப்பட்டனர். (ஒ-3)

## ஒட்டுசுட்டானில் பொம்மர் தாக்கு

ஒட்டுசுட்டானுக்கு சமீபமாகவுள்ள சம்மாங்குளம் கிராமத்தில் கடந்த திங்கட்கிழமை பொம்மர் குண்டு வீச்சுத் தாக்குதல் நடத்தப்பட்டது

பிரயாணிகளை ஏற்றிச் சென்ற மினிபஸ் ஒன்றை நோக்கியே குண்டுவீச்சு நடத்தப்பட்டதாகவும்—

எனினும் எதுவித ஆபத்தும் சேதமும் இன்றி, மினிபஸ் தப்பிவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது (ஒ-113)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி பாக்கியலட்சுமி சுப்பிரமணியம்

திருமதி பாக்கியலட்சுமி சுப்பிரமணியம் அவர்கள் (2-11-90) நேற்று காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற நா. சுப்பிரமணியம் அவர்களின் அருமை மனைவியும், சோமசேகரம் (U K), மசேஸ்வரி, யோகேஸ்வரி ஆகியோரின் அருமைத் தாயாரும், விஜயலஷ்மி, நா. மயில்வாகனம், ரா. தங்கராஜா ஆகியோரின் அருமை மாமியாரும், சதீஸ்குமார் (U K) சுபாஷினி, விஜயரோகினி (U. K). ரேவதி (U K), மலர் (U. K), மிருதுளா, ஜெயப்பிரதா ஆகியோரின் அருமைப் பேத்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (3-11-90) பி. ப 1. 00 மணிக்கு 80, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணத்தில் நடைபெற்று. பூதவுடல் கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறேன்.

80, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
நா. மயில்வாகனம்

(14274)

## திருமதி குலசிங்கம் கலாநிதி
[சுருவில்]

சுருவிலைச் சேர்ந்த திருமதி குலசிங்கம் கலாநிதி 2-11 90 வெள்ளிக்கிழமை காலமானார். அன்னார் குலசிங்கத்தின் அன்பு மனைவியும், சதீஸ்குமார் (லண்டன்), லதாயினி (வேம்படி மகளிர் கல்லூரி), கஜனி (வேலணை மத்திய மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவகுரு - திருமதி சிவகுரு தெய்வானை ஆகியோரின் அன்பு மகளும், காலஞ்சென்ற தர்மலிங்கம் - திருமதி தர்மலிங்கம் அன்னப்பா ஆகியோரின் அன்பு மருமகளும், திருமதி சிவானந்தசிவம் ஜெயநிதி, சிவகுமார் (ஜேர்மன்), குமார், சதாசிவம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், நாகராஜா (ஜேர்மன்), ஜோதீஸ்வரன், திருமதி டேவிட் மாலினி (ஜேர்மன்) ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 3-11-90 சனிக்கிழமை [இன்று] காலை 10 மணிக்குச் சுருவில் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுருவில் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல் :
குலசிங்கம் (கணவர்)

ஐந்தாம் வட்டாரம்,
சுருவில் - ஊர்காவற்றுறை

[14273]

## நா. கணபதிப்பிள்ளை
[மலாயன் பென்ஷனர்]

கரம்பன் மேற்கு நா. கணபதிப்பிள்ளை [மலாயன் பென்ஷனர்] 2-11-90 இல் காலமானார்.

அன்னார் டாக்டர் பத்மநாதன், தர்மதேவி, சத்யதேவி, குணதேவி [கிரிலப்பனை றோ. க. த பாடசாலை], வாமதேவி [புனித மரியாள் வித்தியாலயம்] ஆகியோரின் அன்புத் தந்தையும், விமலேஸ்வரி, சபாரத்தினம், பத்மநாதன், ஸ்ரீஞானம் ஆகியோரின் மாமனாரும், நிரஞ்சன், சுசித்ரா, நிமலன், பிரகதீஸ்வரன் [வட்டுக்கோட்டை தொழில் நுட்ப கல்லூரி], மைத்ரேயி, சுபாங்கி, சுநீத்தா, ஜ்யோத்ஸ்னா ஆகியோரின் பாட்டனுமாவார். ஈமச்சடங்கு கரம்பனில் நடைபெற்றது.

தகவல்:
ஆ. சபாரத்தினம்

கரம்பன் மேற்கு,
ஊர்காவற்றுறை

(14275)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 03 - 11 - 1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## வி. பி. சிங்குக்கு தேவிலால் விருந்து

புதுடில்லி, நவ. 3
முன்னாள் துணைப்பிரதமர் தேவிலால் வியாழன் இரவு பிரதமர் வி. பி. சிங்குக்கு இரவு விருந்துபசாரம் ஒன்றை அளித்தார்.

அதன் பின்னர் பிரதமர் சிங் செய்தியாளரைச் சந்தித்தார்.

ராமர் ஆலயம் கட்டுவது தொடர்பான பதற்றநிலை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டிருப்பதாக திரு சிங் அப்பொழுது தெரிவித்தார். (ஒ-எ)

## பி.பி.சி. சங்கர் இன்று வருகிறார்

கொழும்பு, நவ.3
பி. பி சி 'தமிழோசை' தயாரிப்பாளர் திரு. சங்கர் இன்று கொழும்புக்கு விஜயம் செய்கிறார். (ஒ-எ]

## குரும்பசிட்டி சன்மார்க்க சபை உதவி

யாழ்ப்பாணம், நவ. 3
கடந்த ஜூன் மாதம் முதல் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளால் குரும்பசிட்டி பகுதியில் இறந்தவர்களின் குடும்பத்தினர், காயமடைந்தோர் ஆகியோருக்கு குரும்பசிட்டி சன்மார்க்க சபை உலர் உணவு வழங்கியுள்ளது.

ஜேர்மனியிலுள்ள பிரஸ்தாப சபையின் உறுப்பினர்கள் சேகரித்து அனுப்பிய நிதியில் இருந்து இந்த உதவி வழங்கப்பட்டது.

பாதிக்கப்பட்டு உதவி பெறாதவர்கள் சபைத் தலைவர் கலாகேசரி ஆ. தம்பித்துரையுடன் தொடர்புகொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. [ஒ-3]

## தூதுக்குழு கவலை

ஐரோப்பிய பொருளாதார சமூகத்தைச் சேர்ந்த தூதுக்குழு ஒன்று, பாதுகாப்புத் துணைஅமைச்சர் திரு. ரஞ்சன் விஜேரத்தினாவைச் சந்தித்துப் பேசியது

நான்கு அங்கத்தவர்களைக் கொண்ட இந்தத் தூதுக்குழுவிற்கு திரு. அலெகஸ் சிமித் தலைமை வகித்தார். சந்திப்பின் போது திரு மகிந்தா ராஜபக்ஷா எம் பி இணைப்பாளராக இருந்தார்

இலங்கையில் மனித உரிமைகள் அளவுக்கு அதிகமாக மீறப்படுவது குறித்து தூதுக்குழுவினர் கவலை தெரிவித்தனர். (அ)

## நினைவஞ்சலி கூட்டம்

நாடக நடிகரும், திரைப்பட இயக்குநருமான கலைஞர் எஸ். அருமைநாயகத்தின் (நவாலி) நினைவஞ்சலிக் கூட்டம் நாளை காலை 10 மணிக்கு நல்லூர் கம்பன் கோட்டத்தில் நடைபெறவுள்ளது.

அகில இலங்கைக் கம்பன் கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் இக்கூட்டத்துக்கு கழகத் தலைவர் திரு தி. திருநந்தகுமார் தலைமை வகிப்பார். பல கலை, இலக்கிய அறிஞர்கள் அஞ்சலி உரை நிகழ்த்துவர். (உ)

## பிரிட்டிஷ் துணைபிரதமர் ராஜினாமா

பிரிட்டிஷ் துணைப்பிரதமர் சேர் ஜிப்ரிஹோ நேற்று பதவி விலகி விட்டார்.

ஐரோப்பியா தொடர்பான பிரதமர் தாட்சரின் கொள்கையைத் தம்மால் ஏற்றுக் கொள்ள முடியாமல் இருப்பதாக சேர் ஜிப்ரிஹோ தனது ராஜினமாவுக்குக்காரணம் காட்டியுள்ளார்.

இவரது ராஜினாமாவை பிரதமர் தாட்சர் ஏற்றுக்கொண்டிருக்கிறார். (ஒ-எ)

# ஆரையம்பதி முகாம் மீது புலிகள் குண்டுத் தாக்குதல்

நேற்றுக் காலை 6-15 மணியளவில் ஆரையம்பதி இராணுவ முகாம் மீது விடுதலைப் புலிகள் ''அருள் 89'' ஷெல் குண்டுத் தாக்குதலை நடத்தியதாகத் தெரியவருகிறது

முகாமினுள் ஷெல் விழுந்து வெடித்ததை அடுத்து இராணுவத்தினர் முகாமைவிட்டு வெளியேறி வர முற்பட்டதாகவும்—

அவர்கள் மீது தாங்கள் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியதை அடுத்து அவர்கள் முகாமுக்கு பின்வாங்கிச்சென்றதாகவும் விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன. (ஓ-)

# இடம்பெயர்ந்த ஊழியருக்கு சலுகை வழங்கக் கோருவர்

யாழ்ப்பாணம், நவ. 3
கலவரத்தால் பாதிக்கப்பட்ட சிங்கள அரச, கூட்டுத்தாபன ஊழியருக்கு சம்பளத்துடன் விடுமுறையும், வேறு சலுகைகளும் 1987ஆம் ஆண்டில் வழங்கப்பட்டன.

அதேபோல கிழக்கிலங்கையிலிருந்து இடம்பெயர்ந்த அரச ஊழியருக்கும் சலுகை வழங்கப்பட வேண்டும்.

இவ்வாறு கோரும் பிரேரணை ஒன்று நாளை நடைபெறும் இடம்பெயர்ந்த கிழக்கு மாகாண ஊழியர் சங்கக் கூட்டத்தில் கொண்டு வரப்பட உள்ளது.

பிரஸ்தாப கூட்டம் நாளை காலை பத்துமணிக்கு நல்லூரில் உள்ள யாழ். சாதனா பாடசாலையில் திரு. ச தர்மபாலன் தலைமையில் நடைபெற உள்ளது.

இடம்பெயர்ந்த ஊழியர்களின் அத்திய வசிய தேவைகளைப் பூர்த்தி செய்வது குறித்து கூட்டத்தில் ஆராயப்பட உள்ளது. [அ-6]

# பாப்ரி மசூதியை உடைக்கும் 2 ஆவது முயற்சி முறியடிப்பு

அயோத்தியில் பாப்ரி மசூதியை உடைத்துவிட்டு, அந்த இடத்தில் ராமர் ஆலயம் கட்ட நேற்று விஸ்வ இந்து பரிஷத் தொண்டர்கள் எடுத்த இரண்டாவது முயற்சியையும் பாதுகாப்புப் படையினர் முறியடித்தனர்.

அப்போது பொலிஸார் சுட்டதில் மூன்று பேர் அந்த இடத்தில் இறந்தனர். ஒருவர் மருத்துவமனையில் இறந்தார்.

நேற்றுக் காலை பத்துமணியளவில சுமார் பத்தாயிரம் வரையான தொண்டர்கள் பாப்ரி மசூதியை நோக்கி படை எடுத்தபோதே துப்பாக்கிப்பிரயோகம் செய்யப்பட்டது. [உ-எ]

# சிங்குக்கு பதிலாக புதியவர்; தேவிலால் அதற்கு ஆதரவு

புதுடில்லி. நவ. 3
திரு. வி பி. சிங்குக்குப் பதில் ஜனதா தள் கட்சிக்கு புதிய தலைவர் ஒருவரைத் தெரிவு செய்ய வேண்டும் என்ற கோஷ்டிக்கு, முன்னாள் துணைப் பிரதமர் தேவிலால் ஆதரவு தெரிவித்திருக்கிறார்.

புதுடில்லிச் செய்திகள் இப்படித் தெரிவித்தன.

இந்திரா காங்கிரஸின் ஆதரவுடன் நம்பிக்கை கோரும் பிரேரணை வாக்கெடுப்பில் ஜனதா தள் அரசு வெற்றி ஈட்ட இதுவே ஒரேவழி என்று திரு தேவிலால் கருதுவதாகவும்—

ஆகவே நம்பிக்கை கோரும் பிரேரணை மீதான விவாதம் நடைபெறும்போது ஜனதா தள் கட்சிக்கு புதிய தலைவர் ஒருவர் இருக்கவேண்டும் என்று இக்கோஷ்டியினர் விரும்புவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-எ)

## ● கப்பலில் வந்த பொருள்!

யாழ்ப்பாணம், நவ. 3
உணவுப் பொருள்கள், மற்றும் அத்தியாவசியப் பொருள்கள், மருந்து வகைகள் என்பன மட்டும் தான் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்குக் கப்பலில் கொண்டுவரப்படுவதாக நினைக்காதீர்கள்.

தபால் பொதிகள், பணம் என்பனவும் கொண்டுவரப்படுகின்றன வாஸ்தவம்தான்.

அவை மட்டுமா? பற்பசைகள், பற்தூரிகைகளும் மெற்றிக் தொன் கணக்கில் கொண்டுவரப்படுகின்றன.

அவைதான் போகட்டும். கடந்த திங்கட்கிழமை பருத்தித்துறை வந்த ''லங்காசிறி'' கப்பலில் பெண்கள் மட்டுமே பாவிக்கும் ''சனிட்டரி ரவல்''களும் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. அதுவும் கொஞ்சநஞ்சமல்ல; தொன் கணக்கில்! (அ-3)

## கொம்படியில் வெள்ளத்துக்கு வியாபாரி பலி

தென்மராட்சி, நவ. 3
கண்டாவளையில் இருந்து கொம்படி வெளிப் பாதை வெள்ளத்தில் அரிசி மூடையுடன் வந்த சைக்கிள் வியாபாரிஒருவர் பள்ளம் ஒன்றில் விழுந்து நீரில் மூழ்கி மரணமானார்.

சைக்கிளில்ஏற்றிவரப்பட்ட அரிசி மூடை பிரஸ்தாப நபரின் மேல் விழுந்ததால் அவரால் தப்ப முடியாமல் போய் இருக்கலாம் என நம்பப்படுகிறது.

இவரது சடலம் பின்னர் அழுகிய நிலையில் மீட்கப்பட்டதாகக் கூறப்பட்டது. (ஒ-117)

## மன்னார்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
டிருக்கும் தாக்குதல்களினால் அப்பாவிப் பொதுமக்களுக்கு பெரும் சேதம் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது எனினும் சேதங்கள் குறித்து விரிவான தகவல்கள் கிடைக்கவில்லை.

மன்னார் தாக்குதல்களை அடுத்து பேசாலை அகதி முகாமிலும், மடு தேவாலயத்திலும் அகதிகள் எண்ணிக்கை பெருமளவு அதிகரித்திருப்பதாகத் தெரிய வந்தது

இதேசமயம் —

நேற்று முன் தினம் மன்னார் பகுதிகளில் இடம்பெற்ற மோதல்களில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் இருவர் வீரமரணமடைந்தனர். [உ-3-6]

## தமிழருக்கு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
யில் குறிப்பிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு சென்ற பலர் இந்தியா செல்ல விசாவுக்கு விண்ணப்பித்துள்ளனர் என்றும், அவர்களில் 30 சத வீதத்தினருக்கு மட்டுமே விசா வழங்கப்பட்டதாகவும் மற்றொரு தகவல் தெரிவித்தது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org